செ. வெ. எண். 791 நாள்.27.12.2011

# செய்தி வெளியீடு

## வண்டலூர் சாலை மேம்பாலம்

காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூர் இரயில் நிலையம் அருகில் வண்டலூர் – வாலாஜாபாத் சாலையில் உள்ள இரயில்வே கடவு எண்.34க்கு மாற்றாக ரூபாய். 27.00 கோடி செலவில் மேம்பாலம் கட்டும் பணி முடிவுபெறவுள்ளது.

இம்மேம்பாலத்தில் பாதசாரிகள் இருப்புப்பாதையை கடக்க கட்டப்படும் படிக்கட்டு (Stair case) தவிர இதர பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. பாதசாரிகள் படிக்கட்டுகள், இரயில்வே பணி முடிந்தவுடன் தற்போது தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. வெகு விரைவில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மேம்பாலப் பணி நடைபெற ஏதுவாக இந்த இரயில்வே கேட், 2 ஆண்டுகளுக்கு முன்னால் மூடப்பட்டு, வாலாஜாபாத் மற்றும் காஞ்சிபுரம் செல்லும் வாகனங்கள் தாம்பரம் முடிச்சூர் வழியாக சுற்றி செல்கிறது. மேம்பாலம் திறக்கப்பட்டவுடன் காஞ்சிபுரம் மற்றும் வாலாஜாபாத் செல்லும் லட்சக்கணக்கான பொது மக்கள் பெரிதும் பயனடைவர்.

இம்மேம்பாலத்தை இன்று (27.12.2011) மாண்புமிகு நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி மற்றும் கால்நடைத்துறை அமைச்சர் டி.கே.எம். சின்னையா அவர்கள் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுடன் பார்வையிட்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**